<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 413/2023</u>
<u>வழக்கு சாட்சி PW-6</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணசாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையாநாயக்கர் | தொழில் | : | முதல்நிலைக்காவலர் (பணி நிறைவு) |
| கிராமம் | : | சேர்ந்தமரம் | வயது | : | 81 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.03.2026.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் காவல்துறையில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 01.10.1997ம் வருடம் நான் கடையநல்லூர் காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணியில் இருந்தபோது, கடவுச்சீட்டு பெற்று குற்ற எண்.647/1997 சட்டப்பிரிவுகள் 363, 392 இதச வழக்கை பிரிவு 302, 379 இதசவாக மாற்றம் செய்யப்பட்டதற்கான துரித தகவல் அறிக்கையின் தபாலைப் பெற்று செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை மேலதிகாரிகளுக்கு ஒப்புவித்து வந்தேன். இது சம்பந்தமாக என்னை கடையநல்லூர் காவல்ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

கடையநல்லூரிலிருந்து செங்கோட்டை செல்வதற்கு இரண்டு வழிகள் உள்ளது என்றால் சரிதான். ஒன்று கடையநல்லூர் – பண்பொழி வழி என்றாலும், மற்றொரு வழி கடையநல்லூர் – தென்காசி வழியாகும் என்றாலும் சரிதான். இந்த இரண்டு வழிகளில் நான் எந்த வழியாக

சென்றேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. கடையநல்லூர் காவல்நிலையத்தினரிடம் நான் எத்தனை மணிக்கு கடவுச்சீட்டு வாங்கினேன் என்றாலும், செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் என்றாலும் எனக்கு தற்போது ஞாபகமில்லை. எனது மேலதிகாரிகளின் ஆலோசனைப்படி அவருக்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:39:21 +0530